---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 அபிப்பிராயம்

கம்பஹா விக்கிரமாராச்சி உள்நாட்டு மருத்துவ பல்கலைக்கழகத்தின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, தேறிய சொத்துக்களில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள், பொழிப்பாக்கப்பட்ட முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுடன் கூடிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 18 ஆம் பிரிவின் பிரகாரம் விதிக்கப்பட்டுள்ள 1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 107(5) உப பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையினதும், 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தினதும் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

நிதிக்கூற்றுக்கள் பல்கலைக்கழகத்தின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இக.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, பல்கலைக்கழகத்தின் தொடர்ந்தியங்கும் இயலுமையை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாக இருப்பதுடன் முகாமைத்துவமானது பல்கலைக்கழகத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் மற்றும் மன்றம் தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாகும்.

பல்கலைக்கழகத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் பல்கலைக்கழகத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

### 1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி பல்கலைக்கழகம் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக பல்கலைக்கழகத்தின் தொடர்ந்து இயங்குவது தொடர்பாக போதியளவில் நிச்சயமற்ற நிலைமையொன்று இருக்கின்றதா என்பது தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீட்டிற்காக பல்கலைக்கழகத்தின் தொடர்ந்தியங்குவது தொடர்பாக அடிப்படையின் பயன்பாட்டின் பொருத்தப்பாட்டினை தீர்மானிக்கின்றது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், நிதிக்கூற்றுக்களில் அது தொடர்பாக வெளிப்படுத்துவதற்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டியதுடன் அவ்வெளிப்படுத்தல்கள் பொருண்மையாக இல்லாதிருந்தால் எனது அபிப்பிராயத்தை வெளிப்படுத்த வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் மன்றத்தின் தொடர்ந்தியங்கும் நிலைமையை முடிவுறுத்த நேரலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பல்கலைக்கழகத்தின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பல்கலைக்கழகத்தின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க பல்கலைக்கழகம் செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

## 1.5 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | | இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|---|
| (அ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவையின் நிதிப் பிரமாணம் 571 | | கூட்டுப்பெறுமதி ரூபா 1,684,780 ஆன 02 வருடங்களுக்கு மேற்பாட்ட காலமாக காணப்படுகின்ற கேள்விவைப்பு மற்றும் நிறுத்தி வைத்தல் வைப்பு தொடர்பாக நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிதிக் குழுவின் பரிந்துரையின்படி வருமானத்திற்கு எடுப்பதற்கும், நட்டத்தை தீர்த்துவைப்பதற்கும் உரிய பிரகாரம் தேவையின் அடிப்படையில் மேலும் முன்கொண்டு செல்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | நிதிப் பிரமாணத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | அரச நிதிச் சுற்றறிக்கை இலக்கம் 01/2020 மற்றும் நிதிப் பிரமாணம் | (i) | செயல்நிமித்த உபகட்டுநிதி வழங்கக்கூடிய ஆகக்கூடிய எல்லையை விஞ்சி இரண்டு சந்தர்ப்பங்களின் போது கூட்டுமொத்தமாக ரூபா 345,000 முற்பணம் வழங்கப்பட்டிருந்தது. | நிதிக் குழுவின் மூலம் மற்றும் உபவேந்தரின் விசேட அங்கீகாரத்துடன் பெறப்பட்டிருந்ததுடன் அவ்வாறு மதிப்பீடு செய்யப்பட்ட சில பணிகள் மேற்கொள்ளப்படாத | சுற்றறிக்கை மற்றும் நிதிப் பிரமாண ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் |

| | | | |
|---|---|---|---|
| 371(2) | (ii) சரியான மதிப்பீடு தயாரிக்காமல் 17 சந்தர்ப்பங்களின் போது வழங்கப்பட்ட ரூபா 798,340 முற்பணத் தொகையில் 43 சதவீதம் முதல் 83 சதவீதம் வரை சேமிப்புக் காணப்பட்டதுடன் 14 சந்தர்ப்பங்களின் போது வழங்கப்பட்ட ரூபா 599,350 முற்பணம் உரிய பணிகள் நிறைவேற்றப்படாமல் முழுத்தொகையும் மீளத் தீர்க்கப்பட்டிருந்தது. | சந்தர்ப்பங்களின் பிரகாரம் முற்பணம் சேமிக்கப்பட்டிருந்ததுடன் தாமதமின்றி தீர்த்துவைக்கப்படும். | வேண்டும். |

**1.6 நிதி முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| பல்கலைக்கழகத்தில் பஞ்சகர்ம கட்டிடத்தை திருத்துவதற்காக 2005 ஆம் ஆண்டின் போது கிடைக்கப்பெற்ற ரூபா 250,000 நன்கொடைப் பணம் உரிய நோக்கங்களுக்காக ஈடுபடுத்தப்படாமல் 2005 நவம்வர் 30 ஆம் திகதி முதல் நிலையான வைப்பொன்றில் முதலீடு செய்யப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் அந்த நிலையான வைப்பின் பெறுமதி ரூபா 1,070,927 ஆகக் காணப்பட்டது. | பஞ்சகர்ம கட்டிடத்தை திருத்தும் பணிகள் அந்த ஆண்டின் போது மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் அந்த திருத்தங்களுக்காக உரிய பணத்தைப் பயன்படுத்துவதற்கான தேவை ஏற்பட்டிருக்கவில்லை. | வழங்கப்பட்ட பணம் உரிய நோக்கங்களுக்காக பயன்படுத்தப்படல் வேண்டும். |

**2. நிதி மீளாய்வு**

**2.1 நிதி விளைவுகள்**

பல்கலைக்கழகத்தின் மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 48,773,516 மிகையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 161,849,926 ஆகும். அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 113,076,410 வீழ்ச்சி அவதானிக்கப்பட்டது. இந்த வீழ்ச்சிக்கு மீளாய்வாண்டின் போது சம்பளம் மற்றும் வேதன செலவினம் ரூபா 112,574,488 இனால் அதிகரித்தமை பிரதான காரணமாக இருந்தது.

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| பல்கலைக்கழக செயற்பாடுகளுக்காக போதியளவான இடவசதிகள் காணப்படாமையின் காரணமாக உள்நாட்டு மருத்துவ வழங்கல் திணைக்களத்திற்காக 2022 யூன் 15 ஆந் திகதி முதல் மாதம் ஒன்றிற்கு ரூபா 550,000 வீதம் 02 வருடங்களுக்கு குத்தகை அடிப்படையில் யக்கல | கம்பஹா யக்கல வீதியில் கட்டிடம் குத்தகை அடிப்படையில் பெறப்பட்டு பல்கலைக்கழகத்திற்குத் தேவையான | கிரயங்களைக் குறைத்துக் கொள்வதற்கான நடவடிக்கை எடுக்க வேண்டியிருந்ததுட |

| | | |
|---|---|---|
| வீதியில் கட்டிட தொகுதியொன்று பெறப்பட்டிருந்ததுடன் அதனை பயன்படுத்துவற்கு பொருத்தமான நிலைக்கு கொண்டுவருவதற்கு மேலதிக நிர்மாணங்கள் மற்றும் வேலைகளுக்காக ரூபா 8,817,467 என்ற கணிசமான தொகையொன்று செலவிடப்பட்டிருந்தது. அவ்வாறே சமூக விஞ்ஞான கற்கைப் பிரிவு மற்றும் முகாமைத்துவ கற்கைகளுக்காக மாதமொன்றிற்கு ரூபா 750,000 வாடகையில் 2022 சனவரி 01 ஆந் திகதி முதல் 03 வருடங்களுக்காக மொறட்டுவ பிரதேசத்தில் கட்டிடம் வாடகைக்கு பெறப்பட்டிருந்த போதிலும் அது பல்கலைக்கழகத்தின் பிரதான அலுவலகக் கட்டிடத்திலிருந்து 50 கிலோ மீற்றருக்கு மேற்பட்ட தூரத்தில் அமைந்திருந்ததுடன் முகாமைத்துவ கற்கைகளுக்கான பாடநெறிகளை ஆரம்பித்தல் 2022 திசெம்பர் 31 ஆம் திகதி வரையும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | நடவடிக்கைகளை நடாத்திச் செல்வதற்கு முடியுமான பிரகாரம் தயாரிக்கப்பட்டிருந்தது. அவ்வாறே பண்டாரகம ஆலோகவத்த இடத்தில் சமூக விஞ்ஞான மற்றும் முகாமைத்துவக் கற்கை பீடம் ஸ்தாபிக்கப்பட்டுள்ளதுடன் பட்டப் பாடநெறியின் நடவடிக்கைகளுக்காக மிகவும் பொருத்தமான சூழலில் இந்த பீடம் ஸ்தாபிக்கப்பட்டுள்ளது. | ன் பாடநெறி நடவடிக்கைகளை முறையாக ஆரம்பித்து நடாத்திச் செல்லல் வேண்டும். |

## 3.2 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| முறையான திட்டமொன்று இன்றி பதவியணியினருக்கு விடுமுறை வழங்கப்பட்டதன் காரணமாக மீளாய்வாண்டில் வெளிவாரி விரிவுரையாளர்கள் மூலம் விரிவுரைகளை மேவுகை செய்து ரூபா 840,675 படியாக செலுத்தப்பட்டிருந்தது. | சில பட்டப் பாடநெறிகளுக்காக பாரம்பரிய வைத்தியர்களின் அறிவைப் பெற வேண்டியிருந்தமையால் அவர்களின் அறிவினை பெறுவதற்காக வெளிவாரி விரிவுரையாளர்களின் மூலம் சேவைக பெறப்பட்டிருந்தது. பல்கலைக்கழக தரத்திற்கு உயர்த்தியதன் பின்னர் தேவையான கல்விசார் பதவியணியினர் போதியளவாக இல்லாமையினால் வெளிவாரி அடிப்படையில் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. | கல்விசார் பதவியணியினரின் சேவையை உச்ச அளவில் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 3.3 செயற்திட்டம் அல்லது மூலதன வேலைகளின் தாமதம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| வத்துப்பிட்டிவல மாத்தலானயில் அமைந்துள்ள 2.3533 ஹெக்டேயர் நில அளவான மூலிகைத் தோட்டம் பல்கலைக்கழகத்திற்கு இலவச மானியத்தின் அடிப்படையில் 2013 யூலை 31 ஆம் திகதி கையளிக்கப்பட்டிருந்ததுடன் அந்த தோட்டத்தில் காணப்படுகின்ற மூலிகைச் செடிகள் மற்றும் தாவரங்கள் போன்றவை தொடர்பாக முறையான கணக்கெடுப்பை மேற்கொண்டு அவற்றின் அமைவிடத்தைக் காண்பிக்கப்படுகின்ற அறிக்கையினைப் பேணிச்செல்லலும் மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. அவ்வாறே அந்தத் தோட்டம் நிறுவனத்தின் நோக்கங்களுக்காக | இந்த தோட்டத்தில் நிறுவனத்தின் நோக்கங்களுக்காக பயன்படுத்தும் நோக்கில் ஆளுகைச் சபை மற்றும் நிருவாக சபையின் அங்கீகாரத்தின் பிரகாரம் அந்த சூழலில் தாவர திசு ஆய்வுகூடமொன்றை (Tissue Culture Lab) அமைப்பதற்காக உரிய மாதிரிகளின் பிரகாரம் திட்டமொன்று தயாரித்து கேள்வி கோருவதற்கு தேவையான | முறையான திட்டமொன்றைத் தயாரித்து நிறுவனத்தின் நோக்கங்களை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| பயன்படுத்துதல் மற்றும் தோட்டத்தை மிகுதி அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக ஈடுபடுத்துவதற்கு அறிக்கை திகதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றது. | |

**4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

**4.1 வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2022 ஆம் ஆண்டிற்காக சமர்ப்பிக்கப்பட்ட செயல்நடவடிக்கைத் திட்டத்தில் நிறைவேற்றுவதற்கு எதிர்பார்க்கப்பட்ட 77 செயற்பாடுகளில் 14 செயற்பாடுகள் ஆண்டின் போது ஆரம்பிக்கப்படாதிருந்ததுடன் 48 செயற்பாடுகளின் செயல்முன்னேற்றம் 50 சதவீதத்தைவிட குறைவான மட்டத்தில் காணப்பட்டது. | 2021 மற்றும் 2022 ஆம் ஆண்டில் நாட்டில் காணப்பட்ட சந்தர்ப்ப சூழ்நிலைகளின் காரணமாக திட்டமிடப்பட்ட பிரகாரம் செயற்பாடுகளை மேற்கொள்வதற்கு முடியாதிருந்தது. | திட்டமிடப்பட்ட பணிகளை எதிர்பார்த்த பிரகாரம் நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |